# கீழக்கரை நகராட்சி

கீழக்கரை நகராட்சி அலுவலகத்தில் 2019 செப்டம்பர் மாதத்திற்கான நகர்மன்ற சாதாரண கூட்டம் 28.09.2018–ந் தேதி மாலை 3.00 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், கீழக்கரை நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :-

**பொருள் : 1**

இந்நகராட்சியில் தொழில்வரி மறு சீராய்வு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.2503/2018/ஆர்1, நாள்.21.05.2018ன்படி கீழக்கரை நகர்மன்ற தீர்மானம் எண்.392, நாள்.15.06.2018ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேற்படி தொழில்வரி மறு சீராய்வு செய்வது தொடர்பாக தினசரி நாளிதழில் கடந்த 20.06.2018ன்படி செய்தி வெளியிடப்பட்டது. மேலும், பொதுமக்கள் மற்றும் தொழில் முனைவோரிடம் மறுப்புகள் மற்றும் ஆட்சேபனை மனுக்கள் எதுவும் 30 நாட்களுக்குள் இவ்வலுவலகத்திற்கு வரப்பெறவில்லை. எனவே, திருத்தியமைக்கப்பட்ட தொழில்வரி கட்டணத்தை வசூல் செய்ய இந்நகர்மன்ற தீர்மானம் எண்.423, நாள்.10.09.2018ன்படி இறுதி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், தொழில்வரி மறு சீராய்வு திருத்த அறிக்கையினை மாவட்ட ஆட்சியர் அலுவலக மாவட்ட அரசிதழில் வெளியீடு செய்வதற்கு ‘A4’ அளவில் பக்கம் ஒன்றுக்கு ரூ.2400/– வீதம் 2 பக்கத்திற்கு ரூ.4800/– மட்டும் அரசு தலைப்பில் கருவலத்தில் செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண் இ2/591/2018 )**

**அலுவலக குறிப்பு:**

புதிய தொழில்வரி மறு சீராய்வு கட்டணத்தை வசூல் செய்ய நிர்ணயம் செய்யப்பட்டதை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அரசிதழில் பிரசுரம் செய்வதற்கு ரூ.4800/– வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.431** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 2**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2018–19–ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண்.34ற்கான விவாதத்தின் போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிப்பு எண்.14–ல் “மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Machine) நிறுவப்படும்” என அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதன் பேரில் கீழக்கரை நகராட்சியில் உள்ள 21 வார்டுகளில் 21 தானியங்கும் குடிநீர் மையங்கள் தனியார் தொழில் நிறுவனங்களுடன் / தொழில் முனைவோர்களுடன் இணைந்து சமூக பொறுப்புணர்வு மற்றும் பிற நிதியினை பெற்று செயல்படுத்தவும், அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.378.00 இலட்சத்திற்கும் மற்றும் இப்பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பி வைத்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(கோப்பு எண்.968/2018/இ1)

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.432** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 3</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு மற்றும் மலேரியா காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை தீவிர கொசு ஒழிப்பு பணிகளின் போது பயன்படுத்தப்படும் கொசுப்புழு ஒழிப்பு மருந்தான டெமிபாஸ் (அபேட்) மருந்து மற்றும் கொசுப்புழு ஒழிப்பு மருந்தான பைரித்திரம் (Pyrethirum 2%) வாஙகுவதற்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 427 நாள் 10.09.2018–ன் படி ரூ 2,00,000/–க்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கொசு ஒழிப்பு பணிகளுக்கு பயன்படுத்தப்படும் மருந்துகள் வினியோகம் செய்வதற்கு 26.09.2018–ந் தேதி வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ.எண் | கொசு ஒழிப்பு மருந்துகள் விபரம் | விலையின் விகிதம் | நிறுவனத்தின் பெயர் | | |
|---|---|---|---|---|---|
| | | | ஜீ.வி.ஏஜென்ஸி மதுரை | விகாஸ் ஏஜென்ஸி மதுரை | திருப்பூர் தொழில்நுட்ப தொழிலாளர் தொழில் கூட்டுறவு சஙக லிமிடெட் |
| 1 | டெமிபாஸ் (அபேட்) | **லிட்டர் 1–க்கு (GST Extra)** | ரூ.560/– | ரூ.590/– | ரூ.610/– |
| 2 | பைரித்திரம் ( Pyrethirum 2%) | **லிட்டர் 1–க்கு (GST Extra )** | ரூ.950/– | ரூ.970/– | ரூ.990/– |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் (லிட்டர் 1–க்கு GST **Extra**) குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள ஜீ.வி.ஏஜென்ஸி மதுரை நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்
2. பொதுமக்களின் சுகாதார நலன் மற்றும் பொதுசுகாதார அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு டெங்கு மற்றும் மலேரியா காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்கான கொசு ஒழிப்பு மருந்துகள் வாஙகுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.433</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 4</u>**

எதிர்வரும் வட கிழக்கு பருவ மழைக்காக முன் எச்சரிக்கை நடவடிக்கை – கீழக்கரை நகராட்சி பொதுசுகாதார பணிகளுக்குரிய தளவாட பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணஙகள் வாஙகுவதற்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 428 நாள் 10.09.2018–ன் படி ரூ 3,00,000/–க்கு நிர்வாக அனுமதி பெற்று அதன் அடிப்படையில் இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு பணிகளுக்குரிய தளவாடப்பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணஙகள் வினியோகம் செய்வதற்கு 19.09.2018–ந் தேதி கோரப்பட்ட விலைப்புள்ளியின் அடிப்படையில் வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ. எண் | தேவையான தளவாடப்பொருட்கள் / பாதுகாப்பு உபகரணம் விபரம் | விலையின் விகிதம் | நிறுவனத்தின் பெயர் | | |
|---|---|---|---|---|---|
| | | | ஜீ.வி.ஏஜென்ஸி மதுரை | விகாஸ் ஏஜென்ஸி மதுரை | ஆர்.எஸ்.கே.ஏஜென்ஸிஸ் ஸ்ரீரங்கம், திருச்சி |
| 1 | மண்வெட்டி மரக்கணையுடன் | 1—க்கு | 550 | 600 | 610 |
| 2 | சாக்கடை கரண்டி | 1—க்கு | 430 | 470 | 480 |
| 3 | புள்ளுவாரி (5 பல்லுடன்) | 1—க்கு | 320 | 350 | 340 |
| 4 | கடப்பாறை | 1—க்கு | 1100 | 1150 | 1200 |
| 5 | கூட்டுமாறு | 1—க்கு | 600 | 700 | 750 |
| 6 | சட்டி | 1—க்கு | 420 | 510 | 530 |
| 7 | பெருக்குமாறு | 1—க்கு | 25 | 30 | 35 |
| 8 | பிரஸ்கட்டை | 1—க்கு | 370 | 390 | 380 |
| 9 | கைத்தட்டு | 1—க்கு | 180 | 210 | 230 |
| 10 | சாந்து சட்டி | 1—க்கு | 390 | 420 | 410 |
| 11 | வாளி இரும்பு (சிறியது) | 1—க்கு | 360 | 380 | 390 |
| 12 | மழைக்கோர்ட் | 1—க்கு | 1450 | 1550 | 1600 |
| 13 | அறுவாள் | 1—க்கு | 490 | 520 | 540 |

<u>அலுவலகக்குறிப்பு</u>

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள ஜீ.வி.ஏஜென்ஸி மதுரை நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.434</u>** அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் : 5</u>

இந்நகராட்சிக்குட்பட்ட 1—வது வார்டு புதிய பேருந்துநிலையம் பின்புறம் அமைந்துள்ள மாட்டுக் கொட்டகை கழிவுநீர் பம்பிங ஸ்டேசனில் உள்ள 10HP கழிவுநீர் மின்மோட்டாரில் பொருத்தப்பட்டுள்ள பம்ப் (KIRLOSKAR MAKE SP4L PUMP) பழுதாகி மின்மோட்டாரை இயக்க இயலாத நிலையில் உள்ளதால் மேற்படி பம்பில் பழுதான உதிரி பாகஙகளை மாற்றி பழுது நீக்கம் செய்து தருமாறு இவ்வலுவலக மின்பணியாளரால் கோரப்பட்டுள்ளது.

மேற்காணும் பழுது நீக்கம் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று உடனடியாக மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.20,000/—ஆகும் என இவ்வலுவலக பொதுப்பணி மேற்பார்வையாளரால் தெரிவிக்கப் பட்டுள்ளது. மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண்.1011/2018/இ1)**

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து ரூ 20,000/—யை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
2. பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.435</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 6</u>**

கீழக்கரை நகராட்சி 21 வார்டு பகுதிகளும் தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016—ன் கீழ் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து வழஙகும் பொருட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரஙகள் அச்சிட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்வதற்கும் ஆட்டோ மூலம் மைக்செட் விளம்பரம் செய்வதற்கும் இவ்வலுவலக துப்புரவு மேற்பார்வையாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளபடி மேற்காணும் பணிகளை செய்வதற்கு உத்தேச செலவீனம் ரூ 1,50,000/—ம் ஆகும் துப்புரவு ஆய்வாளரால் குறிப்பு வழஙகப்பட்டுள்ளது. மேலும் அரசு அஙகீகரிக்கப்பட்ட கூட்டுறவு அச்சகம் மூலம் துண்டு பிரசுரஙகள் அச்சிடவும் , ஆட்டோ மூலம் மைக்செட் விளம்பரம் செய்வதற்கும் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
**(கோப்பு எண்.1617/2017/எச்1)**
**<u>அலுவலகக்குறிப்பு</u>**
தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016—ன் படி பொதுசுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து வழஙகிட பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகள் செய்வதற்குரிய உத்தேச செலவீனம் ரூ 1,50,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வழஙகலாம்

**<u>தீர்மானம் எண்.436</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 7</u>**
கீழக்கரை நகராட்சிக்கு உட்பட்ட கீழக்கரை குரூப் சர்வே எண்.310/1A3,1B3 மற்றும் 1B4—ல் மனைப்பிரிவுதானாக பிரிக்கப்பட்டு உள்ளதை அரசானை எண்.78 மற்றும் 172 வீட்டு வரி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை 04.05.2017 மற்றும் 13.10.2017—ன்படி அனுமதியற்ற மனைப்பிரிவை திரு.ஹ.து.சாகுல் ஹமீது, என்பவர் அனுமதி கோரியதின்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) சிவகஙகை அவர்களின் செயல்முறை உத்திரவு ம.வ.வ.மு/ந.ஊ.து.இ (சி.ம) எண்.2127/2018/சி.ம2 நாள்.06.09.2018—ல் மொத்த 39 எண்ணம் மனைகள் அஙகீகரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் பொது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் உள்ள சாலைகள் மற்றும் பூஙகா இடஙகளை நகராட்சிக்கு தான பத்திரம் எழுதி கொடுக்கவும் மேற்படி உத்திரவில் கண்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு உரிய முறைப்படுத்தல் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் பெற்றுக் கொண்டு மேற்படி மனைபிரிவில் கண்டுள்ள மனைகளை வரன்முறைப்படுத்தி இறுதி ஒப்புதல் வழஙக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.1024 /2018/எப்1)**

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைபிரிவில் உள்ள பொது ஒதுக்கீடுகளான சாலை மற்றும் பூஙகா இடத்தினை நகராட்சியின் பாரமரிப்பில் எடுத்து கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.437** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 8**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் இருந்து தினமும் சேகரமாகும் குப்பை கழிவுகளை சேகரித்து இந்நகராட்சிக்கு சொந்தமான பள்ளமோர்குளம் பகுதியில் உள்ள உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. அங்கு சேகரமாகும் குப்பைகளை பிரித்து உரமாக தயாரிக்க 2016–17ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் 1/3 Roof Shed அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியினை மேற்கொள்ளும் பொழுது 1/3 & Pre Processing Shed அமைக்கும் தரைதளத்தில் மணல் மற்றும் கிராவல் நிரப்பும் பணி (Sand and Gravel Filling) செய்வதற்கு மதிப்பீட்டில் ஏதும் வழிவகை செய்யப்படவில்லை. இதனால் பணியில் தேக்கநிலை ஏற்பட்டு வருகிறது. எனவே, மேற்காணும் பணி திட்டப்பணியாக இருப்பதால் பணியினை விரைந்து முடிக்கும் பொருட்டு மண் மற்றும் கிராவல் நிரப்பிய பின் தரைதளம் போடுவதற்கு ஏதுவாக பொறியாளர்களால் ரூ.4,20,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டு செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இந்நகராட்சிப் பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 995/2018/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

1. திட்டப்பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் ரூ.4,20,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.438** அனுமதிக்கப்பட்டது.

**தனி அலுவலர் மற்றும்**
**ஆணையாளர்**
**கீழக்கரை நகராட்சி**